ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/83 - 2018 මැයි මස 18 වැනි සිකුරාදා - 2018.05.18

2071/83 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2018.04.26 ஆந் திகதிய 2068/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினை இரத்துச் செய்தல்**

மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 32 (ஆ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் வில்வித்தை விளையாட்டு தொடர்பான தேசிய சங்கமான இலங்கை வில்வித்தைச் சங்கத்தின் பதிவானது இடைநிறுத்தப்பட்ட 2018.04.26 ஆந் திகதிய 2068/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினை 2018.05.18 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்கின்றேன். அதனடிப்படையில், அவ் வில்வித்தைச் சங்கத்தினை தேசிய சங்கமாக மீண்டும் பதிவு செய்து தாபிக்கின்றேன்.

அதன் உத்தியோகத்தர் தேர்வின் பொருட்டு பக்கச்சார்பற்ற தேர்தல் குழுவொன்றினை நியமித்து 2018 - 2020 ஆம் ஆண்டு தொடர்பாக புதிய உத்தியோகத்தர் குழுவினை நியமித்துக் கொள்ளுவதன் நிமித்தம் தேர்தலுக்கான அழைப்பு விடுத்தற்கும் நடாத்துவதற்கும் இலங்கை வில்வித்தைச் சங்கத்தினை இத்தால் பணிக்கின்றேன்.

பைஸர் முஸ்தபா (பா.உ),
(சனாதிபதி சட்டத்தரணி),
மாகாண சபைகள், உள்ளூராட்சி
மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2018, மே 18.

6 - 299

1A - G 27689 - 12 (2018/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*